Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
FRIDAY, JUNE 02, 2023

வெள்ளிக்கிழமை ஜூன் 02, 2023 | ஒளி: 09 கதிர்: 010 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு | FREE

# விலைகள் குறைப்பு



வியாழக்கிழமை (01) அமலாகும் வகையில், அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக லங்கா சதொச நிறுவனம் அறிவித்துள்ளது.

அதற்கமைய 1 கிலோ கிராம் கோதுமை மா 15 ரூபாயாலும் பெரிய வெங்காயம் 14 ரூபாயாலும் சிகப்பு பருப்பு 11 ரூபாயாலும் வெள்ளைச் சீனி 10 ரூபாயாலும் கடலை 5 ரூபாயாலும் வெள்ளை நாட்டரிசி 4 ரூபாயாலும் குறைக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

## 2048 அபிவிருத்தி அடைந்த ஒரு நாடு

# அதுவே இலக்கு

- மீண்டும் இட்டுச்செல்ல யாரையும் அனுமதியோம்
- 4 முக்கிய தூண்களில் நாட்டைக் கட்டியெழுப்புவோம்
- 25 ஆண்டுகளில் அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்றுவோம்
- இளைஞர் சமூகம் மீது பெரும்நம்பிக்கை வைத்திருக்கிறோம்
- கூட்டாய்வு முறையை அமல்படுத்துவோம்

**2048** அபிவிருத்தி அடைந்த ஒரு நாடு. அதுவே எங்களின் இலக்கு. இந்த இலக்கை அடைவதே எங்கள் போராட்டமாகும் என்று தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாம் ஒன்றாக நமது எதிர்காலத்தை உருவாக்குவோம். சிறந்ததொரு எதிர்காலத்தை உருவாக்குவோம். இப்பணியில் இணையும் உங்கள் அனைவருக்கும் நன்றி என்றார்.

நாட்டைக் கட்டியெழுப்பும் தேசிய நிலைமாற்றத்துக்கான திட்டவரைபடத்தை முன்வைத்து நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வியாழக்கிழமை (01) இரவு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2





# அரசாங்கம் கொண்டுவரும் சட்டமூலங்களை ஆராய குழு

ஒளிபரப்பு அதிகார சபை சட்டமூலம் உள்ளிட்ட அரசாங்கத்தால் கொண்டுவரப்படவுள்ள சட்டமூலங்களை ஆராய, எதிர்க்கட்சியால் பேராசிரியர் சரித்த ஹேரத் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில்

# 14 துறைசார் தொழில் வல்லுநர்கள் பதிவு செய்வது கட்டாயம்

### ஜனாதிபதியின் கையொப்பத்துடன் வர்த்தமானி வெளியானது




வைத்தியர்கள், பொறியியலாளர்கள், உயர் நீதிமன்ற சட்டத்தரணிகள், கட்டடக்கலை நிபுணர்கள் உள்ளிட்ட 14 துறைசார் தொழில்வாண்மையாளர்கள், வியாழக்கிழமை (01) முதல் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் தம்மைப் பதிவுசெய்வதை கட்டாயமாக்கும் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# புருனோ திவாகரவுக்கு 7 வரை விளக்கமறியல்



குற்றப்புலனாய்வு திணைக்களத்தால் கைது செய்யப்பட்ட சமூக ஊடக செயற்பாட்டாளரான புருனோ திவாகரவை எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே, வியாழக்கிழமை (01) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

## நாட்டின் பொருளாதாரம்

# வெகு விரைவில் மீண்டு வரும்

### மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவிப்பு

### பங்களாதேஷின் 200 மில். டொலர் செப்டெம்பரில் வழங்கப்படும்



நாட்டின் பொருளாதாரம் எதிர்பார்த்ததை விட வெகுவிரைவில் மீண்டு வருவதற்கான அறிகுறிகளை தெளிவாகக் காட்டுவதாகவும், மத்திய வங்கியும் தேவையான தலையீட்டை மேற்கொள்ளும் என்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# வட்டி விகிதங்களை குறைத்தது மத்திய வங்கி

இலங்கை மத்திய வங்கியின் நிலையான வைப்பு வசதி வீதம் மற்றும் நிலையான கடன் வசதி வீதத்தையும் முறையே 13 சதவீதத்துக்கும் 14 சதவீதத்துக்கும் 250 அடிப்படைப் புள்ளிகளால் அதாவது 2.5 சதவீதத்தால் குறைக்க மத்திய வங்கியின் நாணயசபை தீர்மானித்துள்ளது.




தொடர்ச்சி P2

## மிதக்கும் சூரிய சக்தி நிலையங்கள்

# அமைக்க 5.2 மில். டொலர் நிதியுதவி

இலங்கையின் முதலாவது மிதக்கும் சூரிய சக்தி மின் நிலையங்களை நிர்மாணிப்பதற்காக இலங்கை சூரிய சக்தி அதிகார சபைக்கு தென்கொரியா 5.2 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்கியுள்ளதாக மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.



தொடர்ச்சி P2



# ரூ.283ஆக குறைந்தது டொலரின் பெறுமதி

இலங்கை மத்திய வங்கியால் வியாழக்கிழமை (01) வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி மேலும் அதிகரித்துள்ளது.

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 283 ரூபாய் 87 சதமாகவும் விற்பனை விலை 297 ரூபய் 23 சதமாகவும் குறைந்துள்ளது.


கடந்த சில நாள்களாக டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பெருந்தோட்ட சமூகத்தின் பிரச்சினைகளுக்கு

# ஐக்கிய இராச்சியத்தின் பங்களிப்பும் அவசியம்

மலையக பெருந்தோட்ட சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு ஐக்கிய இராச்சியத்தின் பங்களிப்பும் அவசியம் என்றும் அதற்காக உரிய ஏற்பாடுகளை செய்து கொடுக்குமாறு ஐக்கிய இராச்சியத்தின் உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டனிடம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2



# எரிபொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாது

### அச்சம் வேண்டாம் என்கிறார் காஞ்சன



நாட்டில் எரிபொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாது என்று உறுதியளித்த மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, தேவையற்ற அச்சம் அடைய வேண்டாம் என்று பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடு முழுவதிலும் உள்ள பல எரிபொருள் நிரப்பு நிலையங்கள் புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் மூடப்பட்டிருந்ததுடன், மேலும் சிலவற்றில் நீண்ட வாகனங்கள் வரிசையில் காணப்பட்டன.

தொடர்ச்சி P2

# உண்மையான தகவல்களை அச்சமின்றி அறிக்கையிடுக

### எதிர்கட்சி பாதுகாக்கும் என்கிறார் சஜித்

ஊடக நிறுவனங்கள் உண்மைத் தன்மை வாய்ந்ததும், துல்லியமான செய்திகளை அறிக்கையிடுமாறும், உங்களைப் பாதுகாக்கும் பொறுப்பை எதிர்க்கட்சி ஏற்பதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அச்சமின்றி உண்மையை மக்களுக்கு எடுத்துரைக்க ஊடக நிறுவனங்கள் முன்வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# அதுவே இலக்கு

இற்றைக்கு ஒரு வருடத்திற்கு முன்னர் இருந்த நிலைக்கு நாட்டை மீண்டும் இட்டுச்செல்ல யாரையும் அனுமதிக்க மாட்டோம் என்று வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, 2048ஆம் ஆண்டு அபிவிருத்தி அடைந்த நாட்டை உருவாக்குவதே தமது போராட்டமாகும் என்றும் தெரிவித்தார்.

"தேசிய நிலைமாற்றத்திற்கான திட்டவரைபடத்தை" நாட்டுக்கு முன்வைத்து விசேட உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காக கடந்த 09 மாதங்களில் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி இதன் போது விரிவாக விளக்கினார்.

அரச நிதி மறுசீரமைப்பு, முதலீட்டு ஊக்குவிப்பு, சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு, அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு ஆகிய பிரதான 04 தூண்களில் நாட்டின் எதிர்காலம் திட்டமிடப்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதாரத்தை முழுமையாக நிலைமாற்றும் செயற்பாட்டுக்கு அவசியமான தொழிநுட்ப மற்றும் நிலையான முயற்சிகளை அமுல்படுத்த தனியார் துறையிடமிருந்து முன்மொழிவுகளை பெற்றுக்கொள்ளும் கூட்டாய்வு முறையொன்று அறிமுகப்படுத்தப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

நவீன உலகுக்கும், நவீன தொழில்நுட்பத்துக்கும் ஏற்றவாறு நாட்டின் பொருளாதாரத்தை மாற்றியமைக்காவிட்டால் நாடு பின்நோக்கிச் செல்லும் என்றும், அதன் முடிவாக நாடு, பொருளாதார காலனித்துவமாக மாறிவிடும் என்றும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, எனவே நாம் புதிதாக சிந்தித்து புதிய பயணத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்ததோடு, அதற்கு அவசியமான துரித பொருளாதார மறுசீரமைப்புக்களை செயல்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மூங்குபடுத்தல், கொள்முதல் மற்றும் அரசியல் ஆகிய அனைத்து அம்சங்களிலும் ஊழலை முற்றிலுமாக நிறுத்துவதற்கும், டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் பொறுப்புணர்வை அடிப்படையாகக் கொண்ட அரசாங்க பொறிமுறையின் மூலம் ஊழலுக்கு எதிரான நடைமுறைகளை செயல்படுத்துவதற்கும் ஒரு விசேட செயலணி நிறுவப்படும் என்றும் குறிப்பிட்டார்.

அடுத்த 05 ஆண்டுகளில் நாம் பொருளாதாரத்தை முழுமையாக ஸ்திரப்படுத்துவதோடு, அடுத்த 25 ஆண்டுகளில் இலங்கையை உயர் வருமானம் ஈட்டும் அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்றுவதாகவும் குறிப்பிட்ட ஜனாதிபதி, முதல் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, நாட்டைக் கட்டியெழுப்பும் பணி அடுத்த தலைமுறையினரிடம் ஒப்படைக்கப்படும் எனவும், அதற்காக இளைஞர்களை தயார்படுத்துவதாகவும் அந்தப் பணியை மேற்கொள்ளும் திறன் எமது இளைஞர்களிடம் இருப்பதாகவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

இந்த மறுசீரமைப்பு வேலைத்திட்டம், இலகுவான பணி இல்லையென்றாலும் நாட்டிற்கு சிறந்த விடயங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் எப்போதும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக வலியுறுத்திய ஜனாதிபதி தீர்மானங்கள் எவ்வளவு கடினமான மற்றும் வேதனையானதாக இருந்தாலும், எதிர்கால சந்ததியினருக்காக அந்தக் கடினமான பாதையில் சரியான கொள்கைகளின்படி முன்னேறுவதன் மூலம் மாத்திரமே நாட்டை மீண்டும் உயர்வடையச் செய்ய முடியும் என்றார்.

# வட்டி விகிதங்களை குறைத்தது மத்திய வங்கி

மே 31ஆம் திகதி நடைபெற்ற இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக மத்திய வங்கி, வியாழக்கிழமை (01) வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பணவீக்கம் எதிர்பார்த்ததை விட வேகமாக குறைதல், பணவீக்க அழுத்தங்கள் படிப்படியாக குறைதல் மற்றும் பணவீக்க எதிர்பார்ப்புகளை மேலும் நங்கூரமிடுதல் ஆகியவற்றுக்கு ஏற்ப பண நிலைமைகளை தளர்த்தும் நோக்கில் சபை இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நிதிச் சந்தைகளில் உள்ள அழுத்தங்களைத் தளர்த்தும் அதே வேளையில், 2022 ஆம் ஆண்டில் காணப்பட்ட வரலாற்றுச் சுருக்கமான செயல்பாடுகளில் இருந்து பொருளாதாரம் மீண்டு வருவதற்கு இத்தகைய பணமதிப்பு நீக்கத்தின் தொடக்கமானது ஓர் உத்வேகத்தை அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏப்ரல் 2023 இல் முடிவடைந்த நான்கு மாதங்களில், வர்த்தகப் பற்றாக்குறை குறிப்பிடத்தக்க வகையில் குறைந்துள்ளது, இது ஒரு வருடத்துக்கு முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், முக்கியமாக குறைந்த இறக்குமதி செலவினங்களை பிரதிபலிக்கிறது.

இது சரக்கு ஏற்றுமதிக்கான வெளிப்புற தேவையின் மிதமான தாக்கத்தை விட அதிகமாக இருந்தது. சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் அனுமதியைத் தொடர்ந்து உள்நாட்டு அந்நியச் செலாவணி சந்தைக்கான வரவுகள் வலுவாக உள்ளன.

தொழிலாளர்களின் பணப்பரிமாற்றம் மற்றும் சுற்றுலாத்துறையின் வருவாய் ஆகியவற்றின் குறிப்பிடத்தக்க மறுமலர்ச்சியானது வெளித் துறையில் பின்னடைவைத் தொடர்ந்து உருவாக்கியது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# விலைகள் குறைப்பு

*1 கிலோ கிராம் கோதுமை மாவின் விலை 210 ரூபாயாகவும், பெரிய வெங்காயத்தின் விலை 115 ரூபாயாகவும், சிவப்பு பருப்பின் விலை 314 ரூபாயாகவும் வெள்ளை சீனியின் 229 ரூபாயாகவும் கடலை 545 ரூபாயாகவும், வெள்ளை நாட்டு அரிசி 175 ரூபாயாகவும் விலை குறைக்கப்பட்டுள்ளன.*

# வெகு விரைவில் மீண்டு வரும்

பங்களாதேஷுடனான 200 மில்லியன் அமெரிக்க டொலர் நாணய பரிமாற்றத்தை செப்டெம்பர் மாதத்தில் தீர்த்து வைப்போம் என்றும் குறிப்பிட்டார்.

இலங்கை மத்திய வங்கியின் தலைமையகத்தில் வியாழக்கிழமை (01) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் பொருளாதாரம் இவ்வருடம் 0.2 வீதத்தால் சுருங்கக் கூடும் என்றும் இந்த வருடத்தின் மூன்றாவது மற்றும் நான்காவது காலாண்டில் பொருளாதாரம் வளர்ச்சியடையும் எனவும் ஆண்டின் முதல் பாதியில் ஏற்பட்டுள்ள சுருக்கம் காரணமாக, இலங்கையின் பொருளாதாரம் இந்த ஆண்டுக்கான எதிர்மறையான வளர்ச்சியை ஏற்படுத்தும் என்றும் இந்த வருடத்தில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 24.2 சதவீதமாக அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

எனவே கடந்த சில வாரங்களாக அ. டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதியை குறைப்பதற்கு மத்திய வங்கி தலையிட்டதாகவும் ரூபாயின் ஏற்ற இறக்கத்தை குறைக்க இந்த முடிவை எடுத்துள்ளோம் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

நாணயத்தை விரைவாக பலவீனப்படுத்துவது அல்லது வலுப்படுத்துவது கடுமையான சிக்கல்களை ஏற்படுத்தும் என்ற அவர், இந்த ஆண்டு 1.67 பில்லியன் டொலர்களை உள்ளூர் சந்தையில் இருந்து மத்திய வங்கி கொள்வனவு செய்துள்ளது என்றார்.

# அரசாங்கம் கொண்டுவரும் சட்டமூலங்களை ஆராய குழு

அதன் ஏனைய உறுப்பினர்களாக இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், கயந்த கருணாதிலக்க, ஹர்ஷ டி சில்வா, எரான் விக்ரமரத்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சட்டமூலம் தொடர்பில் ஊடகவியலாளர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் கருத்துகளை இந்த குழு சேகரிக்க ஆரம்பித்துள்ளதாக அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அனைத்து தரப்பினருடனும் கலந்தாலோசித்ததன் பின்னர், ஒளிபரப்பு அதிகார சபை சட்டமூலம் தொடர்பான எதிர்க்கட்சி கூட்டணியின் நிலைப்பாடு அறிவிக்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டமூலம் குறித்து ஆராய்வதற்காக பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தலைமையிலும் மத்திய வங்கி சட்டமூலத்தை ஆராய்ந்து மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக எரான் விக்ரமரத்ன தலைமையிலும் விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 14 துறைசார் தொழில் வல்லுநர்கள் பதிவு செய்வது கட்டாயம்

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தமானி அறிவிப்பின்படி, இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்த வைத்தியர்கள், இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவகத்தின் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள், இலங்கையின் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர்கள், இலங்கை பொறியியல் நிறுவகத்தின் உறுப்பினர்கள் ஆகியோர் பதிவுசெய்ய வேண்டும்.

மேலும், தொழில்முறை வங்கியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள், இலங்கை கட்டடக்கலை நிறுவகத்தின் உறுப்பினர்கள், இலங்கை உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணிகள் உள்ளிட்ட 14 துறைகளை சேர்ந்தவர்கள் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் பதிவு செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# புருனோ திவாகரவுக்கு 7 வரை விளக்கமறியல்

நகைச்சுவை நடிகை ஜெயனி நடாஷா எதிரிசூரியவுக்கு உதவினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் கணினி குற்றத்தடுப்பு பிரிவினரால் புதன்கிழமை (31) மாலை கைது செய்யப்பட்ட அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே மேற்குறிப்பிட் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

"மோடாபிமானய" என்ற நிகழ்ச்சியில் பௌத்த மதத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ் நகைச்சுவை மேடைப் பேச்சாளர் நடாஷா எதிரிசூரிய 28ஆம் திகதி அதிகாலை கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நடாஷா எதிரிசூரியவின் வாக்குமூலத்தை நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், நடாஷாவின் மேடை நிகழ்ச்சியை காணச் சென்றவர்கள் குறித்தும் விசாரணைகள் இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐக்கிய இராச்சியத்தின் பங்களிப்பும் அவசியம்

நுவரெலியாவுக்கு பயணம் மேற்கொண்டிருந்த ஐக்கிய இராச்சியத்தின் உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் அமைச்சர் ஜீவன் தொண்டமானுடன் வியாழக்கிழமை (01) பேச்சு நடத்தினார்.

நெருக்கடியான காலகட்டத்தில் இலங்கைக்கு ஐக்கிய இராச்சியம் வழங்கிவரும் ஒத்துழைப்புகளுக்கு மலையக மக்களின் சார்பில் நன்றி தெரிவித்த ஜீவன் தொண்டமான், மலையக மக்களின் தற்போதைய நிலைவரம் பற்றியும் எடுத்துரைத்துள்ளார்.

அத்துடன், மலையக மக்களுக்கான பொருளாதார மேம்பாட்டுக்கான வாய்ப்புகளை உருவாக்குவதற்கான வழிமுறைகள் மற்றும் அரசால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் சம்பந்தமாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளன.

## மிதக்கும் சூரிய சக்தி நிலையங்கள்

# அமைக்க 5.2 மில். டொலர் நிதியுதவி

தென் கொரிய வர்த்தகம், தொழில்துறை மற்றும் எரிசக்தி அமைச்சகத்தின் கீழ் செயல்படும் கொரியாவின் அரச சார் நிறுவனமான தொழிநுட்ப அபிவிருத்திக்கான கொரிய நிறுவகம் இந்த பங்களிப்பைச் செய்துள்ளதாக அமைச்சர் தனது டுவிட்டர் பக்கத்தில் வியாழக்கிழமை (01) பதிவிட்டுள்ளார்.

மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சும், தொழில்நுட்ப அபிவிருத்திக்கான தென் கொரிய நிறுவனமும் இது தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் சப்ரகமுவ மாகாணத்தில் சந்திரிகா வாவியிலும் ஊவா மாகாணத்தில் கிரி இப்பன் வாவியிலும் தலா 1 மெகாவொட் திறன் கொண்ட இரண்டு மிதக்கும் சூரிய சக்தி நிலையங்கள் நிர்மாணிக்கப்பட உள்ளன.

அடுத்த வருடம் டிசெம்பர் மாதத்துக்குள் இத்திட்டம் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

# எரிபொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாது

சில எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் எரிபொருள் விலை திருத்தத்தை எதிர்பார்த்து புதிய முற்பதிவுகளை வழங்குவதை தவிர்த்துள்ளதால் இந்த பிரச்சினை எழுந்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐஓசி நிறுவனத்திடம் விநியோகிப்பதற்கு போதுமான எரிபொருள் கையிருப்பு இருப்பதாக அமைச்சர் கூறினார்.

எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் குறைந்தபட்சம் 50 சதவீத கையிருப்பை பராமரிக்க வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த உத்தரவுகளை மீளாய்வு செய்யவும், குறைந்தபட்ச கையிருப்புகளை பராமரிக்காத எரிபொருள் நிரப்பு நிலையங்களின் அனுமதிப்பத்திரத்தை இடைநிறுத்துமாறும் கூட்டுத்தாபனத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

## ஒளிபரப்பு அதிகார சபை

# சட்ட மூலத்தை சமர்ப்பித்தால் நீதிமன்றத்தை நாடுவோம்

ஒளிபரப்பு அதிகார சபை சட்ட மூலம் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் ஐக்கிய மக்கள் சக்தி நீதிமன்றத்தை நாடும் என்று கட்சியின் ஊடகப்பேச்சாளர் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

சட்ட மூலத்தை தயாரித்து வந்த பின்னர் கட்டாயம் நீதிமன்றத்திற்கு செல்வோம் என்றும் இதை நிறைவேற்ற இந்த அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெருன்பான்மை இல்லை என்றும் தெரிவித்த அவர், மொட்டுக் கட்சியில் சிலர் திருட்டு முளி முளிக்கின்றனர் என்றார்.

இது குறித்து மேலும் தெரிவித்த அவர், "இவ்வளவு காலம் இருந்த அரசாங்கம் தேசிய பாதுகாப்பு என்பதை காட்டி ஊடகங்களை அடக்க முயற்சித்தது. மக்களின் வாய்களை மூட முயற்சித்தது. மக்களின் தகவல் அறியும் உரிமையை முடக்க முயற்சித்தது.

தற்போது தேசிய பொருளாதாரம் என்ற புதியதொரு வார்த்தையைப் பயன்படுத்துகின்றனர். தேசிய பொருளாதாரம் என்றால் என்னவென இது வரை விளக்கமளிக்கவில்லை.

தேசிய பொருளாதாரத்தை அழித்தவர்களுக்கு இதுவரை எந்த தண்டனையும் இல்லை. தேசிய பொருளாதாரத்தை கபளீகரம் செய்து நாட்டை வங்குரோத்தடையச் செய்தவர்கள் இதுவரை தண்டிக்கப்படவில்லை.

புதிதாக ஒளிபரப்பு அதிகார சபை சட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்து ஊடக நிறுவனங்களை கட்டுப்படுத்தவும், ஊடகவியலாளர்களை கட்டுப்படுத்தவும், ஊடக அறிக்கையிடலைக் கட்டுப்படுத்தவும், அரசியலமைப்பிலுள்ள தகவல் அறியும் சுதந்திரத்தை கட்டுப்படுத்தவும் முயற்சிக்கிறது என்றார்.

# உண்மையான தகவல்களை அச்சமின்றி அறிக்கையிடுக

வியாழக்கிழமை (01) நடைபெற்ற எதிர்க்கட்சியின் சர்வ கட்சி ஒன்றியத்தின் வாராந்த செயற்குழுக் கூட்டத்தில் ஒளிபரப்பு அதிகாரசபை சட்டம் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், ஜனநாயக விரோத செயற்பாடுகளை அமுல்படுத்தி ஜனநாயகத்தை அழிக்கும் செயற்திட்டத்தின் மற்றுமொரு திட்டத்தை அரசாங்கம் முன்வைத்துள்ளதாகவும், இதன் பிரகாரம் ஒலிபரப்பு அதிகார சபை சட்டத்தின் மூலம் ஒலிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவை ஸ்தாபித்து நாட்டின் ஊடகங்களை நசுக்கி ஜனநாயகத்தை சூறையாடும் வகையில் புதிய சட்டமூலத்தை அரசாங்கம் கொண்டு வரவுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இந்த புதிய சட்டம் கொண்டு வரப்பட்ட பிறகு, இந்த சட்டம் நிறைவேற்றப்பட்ட 6 மாதங்களுக்கு மட்டுமே தொலைக்காட்சி நிறுவன உரிமம் செல்லுபடியாகும் எனவும், அதன் பின்னர், தொலைக்காட்சி அலைவரிசைகள் வருடாந்தம் உரிமம் பெறும் நடவடிக்கைக்கு உத்தரவிடப்பட்டு உள்ளதாகவும் குறிப்பபிட்டார்.

இந்த உரிமம் வழங்குவதில், சம்பந்தப்பட்ட ஊடக நிறுவனம் அரசுக்கு ஆதரவானதா இல்லையா என்பது குறித்து ஆராயப்படும் எனவும், இதன் அடிப்படையில் உரிமக் கட்டுப்பாடுகளை விதித்து ஊடக அடக்குமுறையின் புதிய அத்தியாயத்தை இந்நாட்டில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன் பிரதிபலனாக, இந்த சட்ட வரைவை அரசாங்கம் சமர்ப்பிக்கவுள்ளதாகவும், இதன் மூலம் ஊடகங்கள் மீதான பாரிய அடக்குமுறை முன்னெடுக்கப்பட்டு ஜனநாயகம் மீறப்படும் எனவும் தெரிவித்தார்.

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட செய்திகளை மட்டுமே ஒளிபரப்பும் ஊடக அலைவரிசைகளை உருவாக்கும் செயற்பாடுகளே இதன் கீழ் இடம் பெறும் எனவும், நிறைவேற்று அதிகாரம்,சட்டமன்றம், நீதித்துறைக்குக்கு அடுத்ததாக நான்காவது அரசாங்கமாக கருதப்படும் சுதந்திர சுயாதீன ஊடகங்கள் இதன் கீழ் ஒழுங்குபடுத்தப்படும் என்றும் சுட்டிக்காட்டினார்.

தேர்தல் வரைபடத்தை திருத்தியமைத்து நாட்டில் உள்ள 220 இலட்சம் பேரையும் பயங்கரவாதிகளாக முத்திரை குத்தும் சட்ட மூலத்தை கொண்டு வர முயற்சி செய்து நாட்டு மக்களின் ஜனநாயகத்தை அப்பட்டமாக மீறி வரும் வேளையில், ஊடக நிறுவனங்களையும் அடக்குமுறைக்குட்படுத்தத் தயார் என்றாலும், எதிர்க்கட்சியாக ஒன்றிணைந்து இந்த செயல்முறையை தோற்கடிப்பதாக குறிப்பிட்டார்.

நீதிமன்றத்தின் உதவியை நாடி எப்படியாவது இந்தச் செயலைத் தோற்கடிப்பதாகவும்,அதற்காக பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் குரல் எழுப்பவுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.



# ஆரையம்பதி இலங்கை வங்கி கிளையில் கொள்ளை முயற்சி

ரீ.எல் ஜவ்பர்கான்

இலங்கை வங்கியின் ஆரையம்பதி கிளையை உடைத்து, கொள்ளையிடும் பாரிய முயற்சி, வங்கி முகாமையாளரின் சமயோசிதமான துரித செயற்பாட்டால் தடுக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று (01) அதிகாலை 3.00 மணியளவில் குறித்த வங்கிக் கிளையை உடைத்து, வங்கிக்குள் நுழைந்த கொள்ளையர்கள், பிரதான பாதுகாப்பு பெட்டகம் வைக்கப்பட்டிருக்கும் அறையையும் உடைத்து உள்ளே நுழைந்து, லொக்கரை உடைக்க முயன்ற போது, வங்கியின் முகாமையாளர் லொக்கரின் கைப்பிடியில், தனது அலைபேசி இலக்கத்தை இணைப்புச் செய்திருந்தமையால், கொள்ளையர்கள் லொக்கரைத் தொட்டவுடன், வீட்டிலிருந்த முகாமையாளரின் அலைபேசியில் எச்சரிக்கை மணி ஒலிக்க, துரிதமாகச் செயற்பட்ட முகாமையாளர், உடனடியாக காத்தான்குடி பொலிஸ் நிலையத்துக்கு வருகை தந்து, பொலிஸாரை அழைத்துக் கொண்டு, வங்கிக்குச் சென்றபோது கொள்ளையர்கள் தப்பியோடி விட்டனர். காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மத்திய கிழக்கு நாடுகளில் தவிக்கும் பெண்களை

# இலங்கைக்கு அழைத்து வருக

## வடக்கு, கிழக்கில் பெண்கள் போராட்டம்

வி.ரி சகாதேவராஜா, எஸ்.றொசேரியன் லெம்பெட், க. அகரன்

மத்திய கிழக்கு நாடுகளில் குறிப்பாக ஓமானில் சிக்கித் தவிக்கின்ற இலங்கை பணிப்பெண்களை உடனடியாக நாட்டுக்கு திருப்பி கொண்டுவர வேண்டும் என்று கோரி நேற்று (01) வடக்கு கிழக்கு எங்கும் பெண்கள் ஊர்வலத்துடன் கவனயீர்ப்பு போராட்டம் நடத்தினர்.

வடக்கு, கிழக்கு பெண்கள் கூட்டு முன்னணி அமைப்பு, எட்டு மாவட்டங்களிலும் போராட்டங்களை நடத்தி, அந்தந்த பிரதேச செயலாளர்களிடமும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திடமும் மகஜர்களை கையளித்தன.

அம்பாறை மாவட்டத்துக்கான போராட்டம் ஆலையடிவேம்பில் கூட்டு முன்னணியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் திருமதி கலைவாணி தயாபரனின் தலைமையில் நடைபெற்றது. அதேபோல், மன்னார் மாவட்டத்துக்கான போராட்டம் மன்னார் பஜார் பகுதியில் முன்னெடுக்கப்பட்டது. வவுனியாவில் நடைபெற்ற போராட்டத்தில், பல்வேறு பகுதிகளை சேர்ந்த பெண்கள் கலந்துகொண்டிருந்தனர்.



# 'ஆங்கில' கசிப்பு சிக்கியது

கலால் திணைக்களத்தின் புள்ளிவிவரத் தகவல்களின் பிரகாரம் மதுபான பாவனை சடுதியாக குறைந்துள்ளது. கசிப்பு உள்ளிட்ட ஏனைய சட்டவிரோத மதுபாவனைகள் அதிகரித்துள்ளன.

இந்நிலையில், ரிதிமாலிய எனுமிடத்தில் வித்தியாசமான சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

கசிப்பை காய்ச்சி அதனை விற்பனை செய்வதற்கு தயாராக வைக்கப்பட்டிருந்த நிலையில், சுமார் ஒரு இலட்சத்து 90 ஆயிரம் லீற்றர் கைப்பற்றப்பட்டது. கசிப்பு காய்ச்சுவதற்கான உபகரணங்கள் கடந்த 29ஆம் திகதியன்று கைப்பற்றப்பட்டன. காய்ச்சியவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பிரதேசத்தில் உள்ள பாடசாலையொன்றில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இதேவேளை, வடி கட்டிய 5,000 லீற்றர் கசிப்புடன் அந்த ஆசிரியரின் சகோதரர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவருடைய மனைவி பிரதேச செயலார் காரியாலயத்தில் பணியாற்றுகின்றார் என்றும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

# தந்தை செல்வா நினைவு தினம்

தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் வருடாந்தம் நடத்தப்படும் தந்தை செல்வா நினைவு தினம் ஜிந்துப்பிட்டி நீதிராஜா மண்டபத்தில் மன்றத் தலைவர் லயன் எஸ். ரவீந்திரன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (04) மாலை 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நினைவு நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவரும் எம்.பியுமான மனோ கணேசன், சிறப்பு விருந்தினராக சென் அன்ரனிஸ் கல்லூரி அதிபர் இமானுவேல், கௌரவ விருந்தினர்களாக தினகரன் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர், கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி இராஜேந்திரன் தக்ஷயாயினி, சைவ மங்கையர் கழக அதிபர் திருமதி அருந்ததி இராஜவிஜயன், விவேகானந்தா தேசிய பாடசாலை அதிபர் செல்வி ரி.தேவசியானி, இராமகிருஷ்ணா பாடசாலை அதிபர் எஸ். ராஜமாலினி, புளூமெண்டல் பெண்கள் கல்லூரி அதிபர் ஏ .ஜே நிர்மலா, சென் அன்ரனிஸ் பிரதி அதிபர் மைதிலி உதய சந்திரன், கிறீன் லேன் முஸ்லிம் வித்தியாலய அதிபர் ஏ.எஸ்.எம் சப்ரீன், கொழும்பு கலைமகள் வித்தியாலய அதிபர் எம். முருகானந்தன் ஆகியோரும் அம்பேகமுவ இந்து கலாசார உறுப்பினர் வி.கல்பனா, கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர்களான ஏ.சிவரஞ்சன், கதிரேசன் அன்டன் விக்னேஸ்வரன், ஆசிரியர் ஆ.செல்வராஜ், அதிபர் எஸ்.பி மைக்கல், சட்டத்தரணி பஞ்சாட்சரம், பான் ஏசியா வங்கி முகாமையாளர் அந்தனி எட்வேட் கவின், சக்தி எப்.எம். நிகழ்ச்சி முகாமையாளர் கணாதீபன், என்டிபி வங்கி முகாமையாளர் பாலசுப்பிரமணியம் ஐங்கரன், சமூக சேவையாளர் எஸ்.எம். செல்வக்குமார்ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அமரத்துவமடைந்த கிராம உத்தியோகஸ்தர் உருத்திரன் ஞாபகார்த்தமாக தந்தை செல்வா அறநெறி பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்படவுள்ளதுடன் தந்தை செல்வா அறநெறி பாடசாலை மாணவர்களின் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

தந்தை செல்வா நினைவு தின ஏற்பாடுகளை மன்றத்தின் பொதுச் செயலாளர் எஸ்.கே. தளையரட்ணம், சமய துறைப்பொறுப்பாளர் ஜே ஹருணந்தி ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

இலங்கை பூம்பந்தாட்ட சங்கத்தின்

# உப தலைவராக அலியார் பைசர் தெரிவு

நூருல் ஹுதா உமர்



கிழக்கு மாகாண விளையாட்டுத் துறையின் முன்னோடி ஆசிரியர் அலியார் பைசர், இலங்கை பூம்பந்தாட்ட சங்கத்தின் உப தலைவராக 2023/2027 ஆகிய நான்கு ஆண்டு காலப் பகுதிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அலியார் பைசர், கிழக்கு மாகாண பூம்பந்தட்ட சங்கத்தின் ஸ்தாபகராகவும் பொதுச் செயலாளராகவும், அம்பாறை மாவட்ட பூம்பந்தாட்ட சங்கத்தின் ஸ்தாபகராகவும் பொதுச் செயலாளராகவும் கடமையாற்றி வருகின்றார்.

இவர் உலக பூம்பந்தாட்ட சம்மேளனத்தின் BWF Level - I பயிற்சியாளராகவும் ஆசிய பூம்பந்தாட்ட சம்மேளனத்தின் BAC Level - II பயிற்சியாளராகவும் இலங்கை பூம்பந்தாட்ட சங்கத்தின் SLBA Level - I பயிற்சியாளராகவும் விளையாட்டு அமைச்சின் தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் விசேட வெளிநாட்டு புலமைப்பரிசில் மூலம் மலேசியாவில் பயிற்சியளிக்கப்பட்ட NISS உயர் பயிற்சியாளராகவும் தகைமைகளை பெற்றுள்ளார்.

கிழக்கில் இன விகிதாசாரத்துக்கு அமைவாக

# முஸ்லிம் அதிகாரிகளை நியமிக்கவும்

ஏ.எம் அஸ்லம்

கிழக்கு மாகாண சபையில் இன விகிதாசாரத்துக்கு அமைவாக அமைச்சுகளின் செயலாளர் மற்றும் நிர்வாக சேவை உயர்பதவிகளுக்கு முஸ்லிம் அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும் என்று ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் கிழக்கிலங்கை முஸ்லிம் பேரவை வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து , பேரவையால் ஆளுநருக்கு மகஜர் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக அதன் செயலாளர் செயிட் ஆஷிப் தெரிவித்தார். அவர் இது குறித்து மேலும் குறிப்பிடுகையில்:

கிழக்கு மாகாணத்தில், சிங்கள இனத்தைச் சேர்ந்தோரே காலாகாலமாக ஆளுநர்களாக நியமிக்கப்பட்டனர். 2019 ஆம் ஆண்டு, எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் ஆளுநராக நியமிக்கப்பட்ட போதிலும், சில மாதங்களிலேயே பதவியை இராஜினாமா செய்தார்.

இந்நிலையில், முஸ்லிம்களின் எதிர்பார்ப்புகளை சிதறடித்து விடாமல், கிழக்கில் முஸ்லிம் சமூகத்தை சமத்துவமாக நடத்துவதற்கு புதிய ஆளுநர் செந்தில் தொண்டமான் முன்னிற்பார் என எதிர்பார்க்கின்றோம் என மகஜரில் வலியுறுத்தப்பட்டு உள்ளது என்றார்.

# ஊடகர் நடேசனுக்கு வவுனியா ஊடக அமையம் அஞ்சலி

க. அகரன்

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளரும் நாட்டுப்பற்றாளருமான ஐயாத்துரை நடேசனின் 19ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, வவுனியா ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் நேற்று (01) நடைபெற்றது.

வவுனியா ஊடக அமையத்தின் தலைவர் ப. கார்த்தீபன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஊடகவியலாளர்



நடேசனின் திருவுருவ படத்துக்கு மலர்தூவி, ஒளிதீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. அவர் தொடர்பான நினைவு பகர்வுரையை சிரேஷ்ட ஊடகவியலாளர் சக்திவேல்பிள்ளை பிரகாஸ் நிகழ்த்தியிருந்தார்.

# இலங்கையின் முன்னணி சுகாதார வர்த்தக நாமமான



Harpic (ஹார்பிக்), பெண்கள் பாடசாலைகள் மற்றும் பாடசாலை மாணவிகள் மத்தியில் கழிவறைகளில் சுகாதாரத் தரத்தை உயர்த்தி வருவதுடன் முறையான சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் 'சுவ ஜன' வேலைத்திட்டம் என்ற சமூகப் பொறுப்பு பிரசார நடவடிக்கையையும் ஆரம்பித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் இரண்டாவது நிகழ்ச்சி மினுவாங்கொட, நாலந்த பெண்கள் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது.

கல்வி அமைச்சுடன் இணைந்து சுவ ஜன வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. மேல் மாகாணம் முழுவதும் ஏற்பாடு செய்யப்பட்ட கல்வி நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியாக இந்த நிகழ்ச்சி அமைந்தது. இதன் முதலாவது நிகழ்ச்சியானது 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7 ஆம் திகதி அம்பத்தளை சமுத்திராதேவி பெண்கள் கல்லூரியில் சர்வதேச மகளிர் தினத்துடன் இணைந்து நடைபெற்றது.

இந்த முயற்சி குறித்து கருத்து தெரிவித்த Reckitt Benckiser Lanka Ltd - Harpic வர்த்தக நாம முகாமையாளர் தேவிந்தி ஹேவபந்துல, "பாடசாலை செல்லும் பெண் பிள்ளைகள் மத்தியில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முறையான சுகாதார நடைமுறைகளை ஊக்குவிப்பதில் எங்களின் அர்ப்பணிப்புக்கு இதுவொரு சான்று. கல்வி அமைச்சுடன் இணைந்து செயற்படுவதில் நாங்கள் பெருமையடைகிறோம்" எனத் தெரிவித்தார்.

# விடை சொன்ன ஆசிரியர் நீக்கம்

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றியிருக்கும் மாணவர்களுக்கு விடையளிப்பதற்காக ஒத்துழைப்பு நல்கினார் என்ற குற்றச்சாட்டின் கீழே, அந்த ஆசிரியர் பரீட்சை நிலைய கண்காணிப்பு பணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

அநுராதபுரம், கருக்கங்குளம் விஜயபா பாடசாலை பரீட்சை நிலையத்தில் கடமையில் இருந்த ஆசிரியர் ஒருவரே இவ்வாறு நீக்கப்பட்டுள்ளார் என்று வடமத்திய மாகாண உதவி கல்விப் பணிப்பாளர் (பரீட்சை) எஸ்.ஆர் பரியங்கர தெரிவித்தார்.

இந்த ஆசிரியர் அந்தப் பிரதேசத்தில் தனியார் வகுப்புகளை நடத்தும் ஆசிரியர் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

அவர், தன்னுடைய தனியார் வகுப்புகளுக்கு வருகைதந்த மாணவர்களுக்கே விடையளிப்பத்றகு இவ்வாறு ஒத்துழைப்பு நல்கினார் என ஏனைய மாணவர்களின் பெற்றோர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே அவ்வாசிரியர் கடமையில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

# அரச சார்பற்ற சிவில் சமூக அமைப்புகளுக்கு இடையில் கலந்துரையாடல்



அ. அச்சுதன்

திருகோணமலை மாவட்ட அரச சார்பற்ற சிவில் சமூக அமைப்புகளின் சம்மேளமனம், 'மாற்றத்தை ஏற்படுத்துபவர்களின் வலுவூட்டல்' எனும் தலைப்பிலான கருத்தரங்கு மற்றும் கௌரவிப்பு நிகழ்வை இந்து கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் (31) நிகழ்த்தியிருந்தது.

சம்மேளனத்தின் தலைவர் ந. ரவிசந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு 20க்கும் மேற்பட்ட பொது அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பங்குபற்றியிருந்தன.

இரணைமடுக் குளத்தின் நீர் விநியோகம் தடை:

# பயிர்கள் அழிவடையும் நிலை

சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தில் பாரிய நீர்ப் பாசன குளமான இரணைமடுக் குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறு போகச் செய்கைக்கு, உரிய முறையில் நீர் விநியோகம் மேற்கொள்ளப்படாத நிலையில் பல இடங்களில் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக ஊரியான், முரசுமோட்டை, பன்னங்கண்டி ஆகிய பகுதிகளில் சரியான நீர் விநியோகம் இன்றி வயல்கள் அழிவடையும் நிலையில் காணப்படுகின்றன.

# தூரநோக்கு சிந்தனையுடன் சட்டங்களை இயற்றுவது அவசியமாகும்

காலவோட்டத்துக்கு ஏற்றவகையில் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வது தவிர்க்கமுடியாதது. எனினும், ஒருசில தரப்பினர் தப்பித்துக்கொள்ளும் வகையில், சட்டங்களையும் ஒழுங்கு விதிகளையும் இயற்றிக்கொள்வது நாட்டுக்கு நல்லதல்ல.

காலங்கடந்த சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ளவேண்டும். இல்லையேல், தண்டனை வழங்க முடியாமல் 'திருதிரு'வென தடுமாறிக் கொண்டு இருக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையே ஏற்படும்.

எமது நாட்டை பொதுவாக நோக்குமிடத்து, ஆட்சியில் இருக்கும் அரசாங்கம், தன்னுடைய அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ளும் வகையில், அதியுயர் சட்டமான அரசியலமைப்பிலேயே திருத்தங்களை மேற்கொள்கின்றன. இவற்றில், சில ஷரத்துகள் பிற்காலத்தில் அவர்களுக்கே பெரும் சிக்கலாகியிருந்தன.

எனினும், சாதாரண சட்டங்களை தயாரிக்கும் போது, எவ்விதமான தயவு தாட்சண்யம், பதவிநிலை, அந்தஸ்து ஆகியவற்றுக்கு விலக்களிக்கும் வகையில் தயாரிக்காமல், சகலருக்கும் சமமானதாக இருக்கும் விதத்தில் தயாரிக்கவேண்டும். அதுதொடர்பில் சட்டவாக்கம் (பாராளுமன்றம்) இனியாவது கவனம் செலுத்தவேண்டும்.

தங்கத்தை கடத்திய குற்றச்சாட்டின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டு தண்டப்பணம் செலுத்தப்பட்டதன் பின்னர் விடுவிக்கப்பட்டார். எனினும், அவர் கடத்திவந்த பொருட்களின் பெறுமதிக்கும் அறவிடப்பட்ட தண்டப்பணத்துக்கும் இடையில் பாரிய வித்தியாசம் உள்ளது. அதாவது, சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் அவரிடமிருந்து சரியாக தண்டம் அறவிடப்படவில்லை என்பதே குற்றச்சாட்டாகும்.

எனினும், தென்னந்தோட்டம் ஒன்றுக்குள் புகுந்து 1,200 ரூபாய் பெறுமதியான 20 தேங்காய்களை திருடிய ஒருவரை குற்றவாளியாக இனங்கண்ட நீதிமன்றம் அவருக்கு 10 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட கடூழிய வேலையுடன் கூடிய ஒரு வருட சிறைத்தண்டனையை விதித்துள்ளது.

இங்குதான் சட்டச்சிக்கல் இருக்கின்றது. திருட்டு குற்றச்சாட்டு சாதாரணமானது, கடுமையானது என வகைபிரிக்க முடியாது. திருட்டு என்றால் திருட்டுத்தான். அதில் மாற்றுக்கருத்துகளுக்கு இடமில்லை. தங்கத்தை கடத்திய குற்றவாளியிடம் இருந்து அறவிடப்பட்ட தண்டப்பணம் குறைவானதாகும்.

தேங்காய் திருடனுக்கு வழங்கப்பட்ட தண்டனை சிலவேளைகளில், காலங்கடந்த சட்டத்தினூடாக வழங்கப்பட்டிருக்கலாம். இது, இவ்விரு சம்பவங்களுடன் ஒப்பிடுகையில் ஏற்பட்டிக்கும் தர்க்கமாகும்.

இதற்கிடையே, பௌத்த மதத்தை நிந்தித்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் பலரும் கைது செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். சிவில் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை சட்டத்தின் கீழ் அவர்கள் கைது செய்யப்படுகின்றனர்.

எனினும், ஏனைய மதங்களை நிந்தித்த பௌத்த தேரர்கள் உள்ளிட்ட பலரும் சுதந்திரமாகச் சுற்றித்திரிகின்றனர். அவர்களுக்கு எதிராக, இந்தச் சிவில் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை சட்டம் பாயாமல் இருப்பது வெட்கக்கேடானது.

சட்டம் சகலருக்கும் சமமானதாக இருக்கவேண்டும். இல்லையேல், அச்சட்டத்தின் மீது சாதாரண மக்களுக்கு எவ்விதமான நம்பிக்கையும் இல்லாத நிலைமை ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டு, காலங்கடந்த சட்டங்களை திருத்தும்போதும், புதிய சட்டங்களை இயற்றும் போது, 'சட்டம் யாவருக்கும் சமமானது' என்பதை நினைவில் கொள்க!

தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk
எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

நவீன கவர்ச்சிமிகு நாகரிகம் அனைவரையும் ஈர்த்துவிட்டது. இதனால், அடுத்த தலைமுறைகளுக்கும் எடுத்துச் செல்லவேண்டிய பாரம்பரியங்கள், பண்பாடுகளை அழியவிட்டுவிடுவோமோ என்ற அச்சம் உருவாகிவிட்டது.

பழைமையை மறந்தவர்கள் அதன் வரலாறு, பண்புகள், சிறப்புகள் போன்றவற்றை உணராதவர்களாக இருக்கிறார்கள். கட்டுப்பாடு பலருக்கும் பிடிப்பதில்லை. வாழ்க்கை முறைகளில், ஒழுக்கக் கட்டுப்பாடு அவசியமானது.

சுதந்திரம் என்பது நினைத்தபடி வாழ்வதில்லை. பண்பு, நீதியுடன் வாழ்வதற்கு நெறிமுறைகள் அவசியம். சின்னத் தவறுகளே விஸ்வரூபமாகின்றன. எல்லா மதங்களும் ஒழுக்க நெறியை வலியுறுத்துகின்றன. போதையோடு வாழும் கூட்டம் பெருகிவிட்டது.

உலகம் மறுபக்கம் சுழல்வது போல் இருக்கின்றது. முன்னைய உலகம் இதுவல்ல. புதுமை எனும் பெயரில் எல்லாமே நடக்கின்றன. விழிப்பு வேண்டும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

கறுப்பு ஜூலை நாற்பதாண்டுகளின் பின்னர்–03:

# இனமுரண்பாட்டின் தோற்றுவாயில் சாதியம்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இலங்கையின் இனமுரண்பாட்டைப் புதிய தளத்துக்கு நகர்த்தியதில் கறுப்பு ஜூலை வன்முறைகளுக்கு முக்கிய பங்குண்டு. இதைச் சரிவர விளங்க, இலங்கையின் இனத்துவ, தேசிய இன உணர்வுகளின் வரலாற்று விருத்தியையும் முரண்பாடுகளின் விருத்தியையும் அவை தேசிய இன முரண்பாடாகவும் ஒடுக்குமுறையாகவும் போராகவும் மாறிய வரலாற்றையும் இணைத்துப் பார்க்க வேண்டும்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை என்பது, மூன்று தசாப்தகாலம் நீடித்த ஒரு போர் என்ற குறுகிய பார்வையின் வழி வெளிப்படுகிறது. இவ்வுரையாடல்கள், பிரச்சினையையும் அதன் வரலாற்றையும் பற்றிய அகச்சார்பான விளக்கங்களாலும் குறுகிய குறிக்கோள்களாலும் வழிநடத்தப்பட்டுள்ளன.

இனமுரண்பாட்டின் வேர்கள், அகச்சார்பான விளக்கங்களைக் கொண்டவை. இதற்குச் சிங்களப் பெருந்தேசியவாதமும் தமிழரின் குறுந்தேசியவாத நிலைப்பாடுகளும் பெரும் பங்களித்துள்ளன. இந்த விளக்கங்கள், இனக்குழுக்களினதும் தேசிய இனங்களினதும் அடையாளங்களின் உருவாக்கத்தில் சாதி, பிரதேசம், வர்க்கம் என்பனவற்றின் பங்களிப்பை, அடையாளம் காணுவதில் கவனம் குவிக்கத் தவறியுள்ளன.

இலங்கையின் கொலனியாதிக்க கால அரசியல் வரலாற்றில், சாதி தவிர்க்கவியலாத பங்காற்றியுள்ளது. 1505 ஆம் ஆண்டு முதல் இலங்கை பகுதி பகுதியாக கொலனியாதிக்கத்தின் ஆளுகைக்கு உட்பட்டாலும், கண்டி இராச்சியம் 1815 வரை நிலைத்தது. இது, சிங்களவரிடையே கண்டி இராச்சியத்துக்கு உட்பட்ட பகுதிகளில், நிலவுடைமைத் தன்மை வாய்ந்த சமூக ஏற்றத் தாழ்வுகளுக்கும் சாதிய அடுக்குகள் இறுக்கமடைவதற்கும் வழிவகுத்தன.

'கோவிகம' மேட்டுக்குடி சாதியினர் கொலனியாதிக்கத்துடன் நெருக்கமான உறவை வைத்திருந்தமையால், அவர்களால் பொருளாதார ரீதியில் மேல்நிலையில் இருக்க முடிந்தது. சாராயக் குத்தகை மூலம் பெருஞ்செல்வந்தர்களாக மாறிய 'கராவ' சமூகத்தினர் கல்வி, வியாபாரம் ஆகிய துறைகளில் தம்மை ஈடுபடுத்தி, வலிய அரசியல் சக்தியாக மாறினர்.

ஒல்லாந்தர் காலத்தில் செல்வாக்கு உள்ளவர்களாக இருந்து 'சரிந்த சலாகம' சாதி, கள்ளிறக்கும் தொழிலுடன் தம்மைத் தொடர்புபடுத்திய 'துராவ' சாதி ஆகியவற்றின் உயர் வர்க்கத்தினர் கல்வியறிவிலும் சிறுவணிகத்திலும் ஈடுபட்டு மேநிலையாக்கமடைந்தனர். இம்மூன்று சாதியினரும் 'கொவிகம' மேட்டுக்குடியினருடன் அரசியல் ரீதியாக போட்டியிட்டனர். இவர்களிடையே கடும் போட்டி நிலவியது.

இவர்களுக்கிடையிலான அரசியல் போட்டி 20ஆம் நூற்றாண்டின் முன்னரைப்பகுதி வரைத் தொடர்ந்தது. இந்த அரசியல் போட்டி இனத்துவ முரண்பாடு முழுமையாகத் தன்னை வெளிக்காட்டுவதைத் தாமதப்படுத்தியது. அதற்குக் காரணங்கள் பல உள்ளன.

முதன்மையானது, சிங்கள - தமிழ் உயர் சாதியினருக்கு இடையிலான நெருக்கம். அரசியல் ரீதியாக மிகுந்த செல்வாக்கும் கொலனியாதிக்கத்தின் நம்பிக்கைக்குரிய சேவகர்களாக இருந்த 'கொவிகம' மேட்டுக்குடியினருக்கும் யாழ். மைய 'வேளாள' மேட்டுக்குடியினருக்கும் இடையிலான நல்லுறவு, உயர்சாதிய உயர்வர்க்க உறவால் உருவாகி நிலைபெற்றது.

இருபதாம் நூற்றாண்டின் முதற்கால் நூற்றாண்டுவரை சிங்களவர்-தமிழர் என்ற முரண்பாடு மேலெழாமைக்குச் இன்னும் சில காரணிகள் இருந்தன. இலங்கை விவசாய மையப் பொருளாதாரமாக இருந்தபோது, இரு சமூகங்களுக்கு இடையிலான விவசாயப் போட்டி இருக்கவில்லை. இருவரது பிரதேசங்களும் வேறு வேறானவையாக இருந்தன. விவசாய நிலத்துக்கான போட்டி இருக்கவில்லை.

அதேவேளை, வர்த்தகத்தில் தமிழர்கள் எவ்வகையிலும் சிங்கள வணிகர்களுக்குப் போட்டியாக இருக்கவில்லை. அரசாங்க உத்தியோகத்தைப் பொறுத்தவரையில், சிங்களவர்களுக்குப் பெரும் நாட்டம் இருக்கவில்லை. தமிழரும் பறங்கியரும் ஆங்கிலம் கற்று, அரசாங்கப் பணிகளை நாடியளவு சிங்களவர்கள் நாடவில்லை.

அதேவேளை, பணி வெற்றிடங்களுக்குப் பெருமளவு போட்டி இருக்கவில்லை. படித்த தமிழர்கள் பலர், வேறு பிரித்தானியக் கொலனிகளுக்கு வேலை தேடிச் சென்றார்கள். முதலாம் உலகப் போர் அதைத் தொடர்ந்த பொருளாதார மந்தநிலை என்பவற்றால் காலப்போக்கில் தமிழர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கான வாய்ப்புகள் குறைந்தன. இதனால், தமிழர்கள் இலங்கையில் அதிகளவான அரச உத்தியோகங்களை நாடினர். அப்போது தமிழர்களுக்கும் பறங்கியருக்கும் இடையே போட்டி நிலவியது.

இந்தப் போட்டி என்பது, இவ்விரு சமூகங்களுக்கு இடையிலான போட்டியல்ல. மாறாக, இரு சமூகங்களிலும் உயர்குடியில் இருந்த கற்றோருக்கு இடையிலான போட்டியாகும். கல்விக்கும் சாதிக்கும் இடையிலான உறவு குறித்து, இவ்விடத்தில் இரண்டு விடயங்களை மனங்கொள்வது முக்கியம்.

வடக்கில் தமிழரிடையே வேளாளரது ஆதிக்கம், வெறுமனே நிலத்தின் மீதான ஆதிக்கமாக மட்டும் இருக்கவில்லை. சாதிப் படிநிலையின் அடிப்படையிலும், அதற்கும் மேலாக, பொருள் வசதியின் அடிப்படையில் சாதிப் பிரிவு ஒவ்வொன்றுக்குள்ளும், கல்வி, உத்தியோக வாய்ப்புகளை மறுக்கும் அதிகாரத்தையும் பேணி வந்தது. இதனால் தமிழ்ச் சமூகங்களில் கல்வி வாய்ப்புகள் வேளாள உயர்குடி அல்லாதோருக்கு மறுக்கப்பட்டன.

இந்த மறுப்பு, பல வடிவங்களில் நிகழ்ந்தது. வேளாள உயர்குடி மனோபாவம் சமூகத்தில் இருந்த ஏனையோரை பல்வேறு அடிப்படைகளில் வேறுபட்டவர்களாக நோக்கியது. வடபுலத்தில் வாழ்ந்து வந்த ரோமன் கத்தோலிக்கர்கள், புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் ஆகியோர் மத அடிப்படையில் 'நம்மவர் அல்ல' என அறியப்பட்டனர்.

நீண்டகாலமாக யாழ்ப்பாணத்தில் வாழும் மட்டக்களப்பு தமிழர்கள், மேற்குக் கரையோர தமிழர்கள் ஆகியோர் புவியியல் அடிப்படையில் 'மற்றவர்கள்' எனப்பட்டனர். ஆழ்ந்து நோக்கின், இதன் அடிப்படையாக சாதியே இருந்தது. அதிகாரமும் கல்வி வாய்ப்புகளும் ஒருங்கே பெற்றிருந்த சைவ வேளாளர்கள், அதை ஏனைய சமூகங்களுக்கு மறுப்பதை தொடர்ச்சியாக உறுதி செய்து வந்ததார்கள்.

சிங்கள சமூகத்தில் பிரதான ஆதிக்க சாதிக்களுக்கு வெளியே இருந்த சாதியினர் ஒடுக்குமுறைக்கு ஆளாகினார்கள். கண்டி இராச்சியத்தில், தாழ்த்தப்பட்ட சாதியினராக இருந்த 'பத்கம' போன்ற சமூகங்கள், சுதந்திரத்துக்குப் பின்பும் அதே படிநிலையிலேயே இருந்தனர்.

அதைப்போலவே இருந்த 'வகுபம்புர' சமூகத்தினரும் சிறுவணிகத்தின் உதவியுடன் சிறிது மேல்நிலையை அடைந்தனர். இவ்வாறு முன்னேற்றமடைந்த சமூத்தினருக்கு கல்வி, உயர்தொழில் வாய்ப்புகளை சிங்கள உயர்குடியினர் தொடர்ந்து மறுத்து வந்தனர். இந்த விடயத்தில், சிங்கள - தமிழ் சாதிய ஒடுக்குமுறை, ஒரே வகைப்பட்டதாக இருந்தாலும் முக்கியமானதொரு வேறுபாடு இருந்தது.

சிங்களவர்களிடையே 'சாதித்தடிப்பு' மிகவும் அதிகமாக இருந்த கண்டிய சிங்களப் பகுதிகளில் கூட, யாழ். குடாநாட்டில் நடைமுறையில் இருந்தளவு மிகக் கொடுமையான தீண்டாமைகளோ, பாகுபாடுகளோ நிலவவில்லை.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இந்தச் சாதிய வேறுபாடுகள் தமிழ் - சிங்கள சமூகங்களுக்கு உள்ளும் சமூகங்களுக்கு இடையிலும் நெருக்கடிகளைத் தோற்றுவிக்கத் தொடங்கின. ஒருபுறம் சமூகங்களுக்குள் முரண்பாடுகள் வலுத்தன.

சாதிய அடிப்படையில் தாழ்த்தப்பட்ட மக்கள், கல்வியின் உதவியுடனும் வணிகத்தின் உதவியுடனும் மெதுவாக சமூகப் படிநிலைகளில் மேலேறத் தொடங்கினர். இது அதிகாரத்தில் இருந்த உயர்சாதிய மேட்டுக்குடிகளுக்கு சவாலானது.

வடபுலத்தில் கிறிஸ்தவ மிசனரிகளின் வருகை யாழ். சமூக அசைவியக்கத்தில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்தது. கல்வியும் மருத்துவமும் உயர்சாதியினருக்கு என்ற நிலையில், மாற்றம் ஏற்படத் தொடங்கியது.

இதேவேளை, 1896இல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சுருட்டுத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம், வடபுலத்தில் அதிகாரத்துக்கு எதிரான முதலாவது ஒருங்கிணைந்த குரலாக ஒலித்தது. சிங்கள சமூகத்தில் கல்விக்கான வாய்ப்புகள் திறந்தன. பௌத்த மீளெழுச்சியை சாத்தியப்படுத்த, சாதியம் கடந்த இயக்கத்தின் தேவை உணரப்பட்டது. அதேவேளை, பிரித்தானிய கொலனிய ஆட்சியில் தங்களுக்கான அதிகாரப் போட்டி நிலவியது. சாதி அடிப்படையிலும் கண்டிச் சிங்களவர் - கரையோரச் சிங்களவர் என்ற அடிப்படையிலும் சிங்களவர்கள் தங்களுக்குள் முரண்பட்டனர்.

மறுபுறம், இரு சமூகங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் தோற்றம் பெறத் தொடங்கின. அதிகாரத்துக்கான போட்டி அடுத்த கட்டத்தை அடைந்த நிலையில், சிங்கள - தமிழ் உயர்குடி வர்க்கத்தினரிடையே மறைமுகமான ஒரு போட்டி நிலவியது. இந்தப் போட்டி அரசியல் அதிகாரம் பற்றியதாக இருந்தது.

இவ்விருவகைப்பட்ட நெருக்கடிகளும் உயர்சாதி மேட்டுக்குடிகளை நெருக்கடிக்குள் தள்ளின. இந்நெருக்கடிகளை தத்தமது சமூகங்களுக்குள் தீர்த்துக் கொள்வதற்கும் தமது மேநிலையாக்கத்தைக் தக்கவைத்துக் கொள்ளவும் சிங்கள-தமிழ் உயர்குடிகள் புதிய வழிகளைத் தேடினர். தத்தமது இனக்குழுக்களின் முழுமையான ஆதரவைத் திரட்டுவது அவசியம் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர்.

இந்தப் பின்புலத்தில் இனத்துவ மையப்பட்ட தேசியவாதம் எழுச்சி பெறுவதற்கான வாய்ப்புகள் இருந்தன. ஆனால், தத்தமது அக முரண்பாடுகளைக் கையாள்வதற்கு மதமே பொருத்தமான கருவி என்று அவர்கள் கருதினர்.

யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ மிசனரிகளின் வருகை மிகப்பெரிய நெருக்கடியைக் கொடுத்த நிலையில், கிறிஸ்தவத்திற்கு எதிரான சைவசமய மீளெழுச்சியை தங்களது ஆயுதமாக்கினர். சிங்கள சமூகத்தில் சாதியம் கடந்த பௌத்தத்தை நோக்கிய நகர்வைத் தடுக்கும் வகையில், பௌத்த சமய மீளெழுச்சியை சிங்கள உயர்குடியினர் கையக்கப்படுத்தினர். ஆதிகாரத்தைத் தக்கவைக்கும் எதிர்ப்புகளை அடக்கும் வழிமுறையாக மதம் பயன்படுத்தப்பட்டது.

## கடிதங்கள்

ஆறு கிலோ மீற்றரை கடக்க ஒருமணி நேரம்:

### போக்குவரத்தில் பெரும் நெருக்கடி

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வேரவில், கிராஞ்சி, சிவபுரம், வலைப்பாடு, பொன்னாவெளி, பாலாவி ஆகிய ஆறு கிராமங்களுக்கான பிரதான வீதி போக்குவரத்தில், மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகிறார்கள்.

மேற்குறித்த ஆறுக்கும் மேற்பட்ட கிராமங்களுக்கான ஒரேயொரு பாதையான பல்லவராயன் கட்டு சந்தி - வேரவில் வரையான ஆறு கிலோ மீற்றர் தூரத்தை, தற்போது கடப்பதற்கு குறைந்தது 45 நிமிடங்கள் முதல் ஒருமணி நேரத்தை செலவிட வேண்டியுள்ளது.

குறித்த வீதியானது, சுமார் 45 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாத நிலையில், 2020ஆம் ஆண்டில் 'ஐ றோட்' திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டு இருந்தாலும், அதன் புனரமைப்பு பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்டன.

இதனால், இங்குள்ள மக்கள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள். குறிப்பாக, வேரவில் வைத்தியசாலைக்கு வைத்தியர்கள் சென்று வருவதற்கும், அங்கிருந்து அவசர நோயாளிகளை முழங்காவில், கிளிநொச்சி போன்ற வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்வதற்கும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் மாவட்ட சுகாதாரப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, இரவு வேளைகளில் குறித்த பிரதேசத்திலிருந்து சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்ட நோயாளிகள் பலர், இடைநடுவில் உயிரிழந்ததாகவும் கிராமவாசிகள் தெரிவித்தனர்.

புனரமைப்பு பணிகள் கைவிடப்பட்டுள்ளதால், கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக, இவ்வீதியின் மூன்று இடங்களில் வெள்ளம் குறுக்கறுத்து பாய்ந்ததுடன், நீண்ட நாள்களுக்கு வெள்ளமும் தேங்கி நின்றதால், போக்கு வரத்துகள் உழவு இயந்திரங்களிலேயே மேற்கொள்ளப்பட்டன.

யது பாஸ்கரன்

# அற்புதம் நிறைந்த சேனையூர் ஸ்ரீ நாகம்மாள்

## ஆலயத்தின் வருடாந்த வைகாசிப் பொங்கல் பெருவிழா!

அ . அச்சுதன்





இந்து சமய வழிபாட்டு முறையில் கை மேல் பலன் கிடைக்கும் வழிபாட்டு முறையில் சக்கி வழிபாடு மிகவும் பிரசித்தி பெற்றது. இச் சக்கி வழிபாட்டில் அவரவர் செய்யும் கர்ம பலன்களுக்கு ஏற்ப தோசங்கள் ஏற்படும் போது அவற்றுக்கான பரிகாரங்களை செய்து வாழ்வில் நல்ல நிலையை அடையச் செய்யும் வழிபாட்டு முறையில் தற்காலத்தில் மேலோங்கி காணப்படுவது நாக தேவதைகளுக்கான வழிபாட்டு முறையாகும்.

அவ்வாறு தோச நிவர்த்தி மற்றும் வேண்டும் அடியவர்களுக்கு வரங்களை அள்ளி அள்ளிக் கொடுக்கும் சேனையூர் அருள் மிகு ஸ்ரீ நாகம்மாள் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல் பெரு விழா - நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2054 - சோபகிருது வருடம் திங்கள் 21ம் நாள் ( 04 .06 .2023 ) ஞாயிற்றுக்கிழமை காலை 08 மணி 53 நிமிட சுபவேளையில் சேனையூர் ஸ்ரீ வருணகுலப் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெறும் ஆரம்பப் பூசை நிகழ்வுடன் ஆரம்பமாகும்.

மடைப்பெட்டி, ஊர்வலம், காவடிகள், பூசைப்பெட்டிகள் சகிதம் சேனையூர் அருள் மிகு ஸ்ரீ வீரபத்திரர் ஆலயம் சென்று அவ்விடமிருந்து தூக்கப்படும் காவடிகள் பூசைப்பெட்டிகளோடு பிரதான வீதியூடாக நாகம்மாள் வீதியை வந்தடைந்து, முச் சந்தியில் வைக்கப்படும் முச் சந்தி மடையுடன் ஸ்ரீ நாகம்பாள் ஆலயத்தை சென்றடையும் ஆலய பிரதம அர்ச்சகர் பல்துறைக்கலைஞர், சோதிடர், சிவஸ்ரீ அ. அரசரெத்தினம் அவர்களால் பக்தி பூர்வமாக மடைப்பெட்டி வளர்ந்து கையேற்கப்பட்டு தொடர்ந்து பொங்கல் விழா நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

கிழக்கிலங்கையிலுள்ள தமிழ் மக்களின் பாரம்பரிய கலை, கலாசார, இலக்கிய சமய வரலாறுகள் வளர்ந்த மண் என சிறப்பிக்கப்படும், வர்ணிக்கப்படும் மூதூர் கிழக்கின் கட்டைபறிச்சான் வடக்கு பகுதியில் இயற்கை எழில் கொஞ்சும் சேனையூர் எனும் புண்ணிய பதியிலே அருள் மிகு ஸ்ரீ நாகம்மாள் வீற்றிருந்து அருள்பாலித்து வருகின்றார்.

உலகில் பல்வேறு நாடுகளிலுள்ள வழிபாட்டு முறைகளில் தாம் தரிசிக்கும் தெய்வத்தை கண்கூடாக கண்டு தரிசிக்கும் பாக்கியம் இந்த நாகதேவதை வழிபாட்டில் மட்டுமே காணப்படுவது இதன் சிறப்பாகும். சேனையூர் நாகம்மாள் ஆலயமானது 121 வருடத்திற்கு மேல் வரலாறு அற்புதம் கொண்டதாகும். இவ் ஆலயம் வரலாற்றிலே 2 ஆண்டுகள் மட்டுமே எவ் வித பூசை நிகழ்வுகளும் நிகழாமல் இருந்துள்ளது. இதற்கு அப்பகுதியில் இடம் பெற்ற 'கொடும் யுத்த சூழல்' காரணமாகும்.

திருகோணமலை மாவட்டத்தில் மட்டுமில்லாது கிழக்கு வாழ் தமிழ் மக்கள் மற்றும் இலங்கையின் பல பாகங்களிலிருந்து வரும் சகல பக்த அடியார்களும் இந்த வைகாசிப் பொங்கல் திருவிழா காலத்தில் கலந்து கொண்டு, தமது நேர்த்திக் கடன்களை செலுத்திச் செல்வது வழமை. புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்து கூட மக்கள் வந்து, இத் திருவிழாவில் கலந்து கொள்வது வழக்கம்.

ஆகம ரீதியான பூசை முறைகள் எதுவுமின்றி, சடங்கு முறையை மையமாகக் கொண்ட தனித்துவமான வழிபாட்டு



முறையை கொண்ட இந்த ஆலயத்தின் பூசையானது, பார்ப்பவர்களை மெய் சிலிர்க்க வைப்பதுடன், உண்மையான நம்பிக்கையையும், பக்திப் பரவசத்தையும் ஏற்படுத்தும் வண்ணம் அமைந்திருக்கும்.

பல சகாப்தத்திற்கு மேல் பழைமையும், அற்புதங்களும் இடம்பெற்று வரும் இந்த ஆலயத்திற்கு மேலும் பெருமை சேர்ப்பது ஆலயத்தின் மூலஸ்தானமாகும். சிறிய ஆசி வடிவிலான இவ் முலஸ்தானம் இன்றும் அப்படியே இருக்கிறது. இதன் பின் புறம் ஒரு புற்றும் அதனை சுற்றி ஒரு வில் வளைவுடனான சுற்று மதிலும் கட்டப்பட்டிருக்கிறது. இந்த மதிலுக்குள் அமைந்துள்ள புற்று வாயிலாகவே ஆலய அர்ச்சகரால் 'நாகம்மாளுக்கு பால், பழக்கரைசல் வைக்கப்படும். இப்பால், பழ பூசை காண வைகாசி பொங்கல் நாளில் அடியார்கள் முண்டியடித்து காண முயலுவார்கள். அருளுள்ளோர் கண்களுக்கு நாக தெய்வத்தின் அருட்காட்சி கிடைப்பதுண்டு. இந்த அருட்காட்சியில் காணும் நாக தேவதையின் தரிசனம் அருட்பேறு என்றால் அது மிகையாகாது.

சேனையூர் பதிக்கே வாருங்கள் – ஸ்ரீ
நாகம்மாளைப் போற்றுங்கள்
தேனாய் இனிக்கப் பாடுங்கள் – தேவி
தரிசனம் தருவாள் பாருங்கள்

என்ற பாடலின் மூலம் தேவியின் தரிசனத்தை சேனையூர் கவிஞர் கவிக்குயிலன் இவ்வாலயத்தின் மீது பாடிய பாடல் வரிகள் மூலம் கூறியுள்ளார்.

இவ் ஆலயத்தின் மூல மூர்த்தியாக நாக சிலையும் எழுந்தருளியாக அன்னை புவனேஸ்வரிக்கு ஐந்து தலை நாகம் குடை பிடித்தாற் போல் காட்சிதர அபயவரதம் காட்டி எழுந்தருளியுள்ளார்.

மேலும் இங்கு ஸ்ரீ வரசித்தி விநாயகர்,சூரிய நாராயணர், ஸ்ரீ ஆஞ்சநேயர், ஸ்ரீ பைரவமூர்த்தி, ஆகிய தெய்வங்கள் பரிவாரங்களாகவும், ஆலய உட்பிரவாகத்தில் சக்திவேல், ஸ்ரீ சந்தான கோபால் சுவாமியும் வழிபடப்படுகின்ற தேவதைகளாக காட்சி தருகின்றனர்.

ஆலய அர்ச்சகர் மஞ்சள் நிறத்துணியால் வாய், மூக்கு காதுகளை கட்டிக் கொண்டே நாகதேவிக்குரிய சகல பூசை வழிபாடுகளையும் செய்து வருகின்றார். சர்ப்பம் தீண்டியவர்களுக்கு, விசக்கடி சம்மந்தமான நோயாளர்களுக்கும், புத்திர பாக்கியமற்றோர், திருமணதடையுடையோர் ஆகிய தோஷமுள்ளோர்களுக்கு பரிகாரங்கள் அர்ச்சகரால் மேற்கொள்ளப்படும்.

தாம் அன்னையிடம் வேண்டி நேர்த்திக்கடன் வைக்கும் அடியார்கள் தமது வேண்டுதல் நிறைவேறிய பின் அந்த நேர்த்திக் கடனை செலுத்துவதற்காக இத் திருவிழா காலத்தில் பெருந்தொகையானவர்கள் ஆலயத்தை நாடி வருவதை அவதானிக்கலாம்.


திருவிழாக் காலங்களை விட ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழைமைகளில் ஆலயத்தில் விசேடமான பூசைகள் இடம்பெறும். இவ்வாலயத்தில் கட்டப்படும் மஞ்சள்நிற வேளை நூலுக்கு மிகவும் மகத்துவமான சக்தியுள்ளது என அடியார்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான அற்புதங்கள் நிறைந்த கட்டைபறிச்சான் வடக்கு - சேனையூர் அருள்மிகு ஸ்ரீ நாகம்மாள் ஆலயத்தின் வருடத்திற்கு ஒரு நாள் இடம் பெறும் வைகாசிப்பொங்கல் விழாவில் கலந்து கொண்டு கலியுகத்தின் கண்கண்ட தெய்வமான நாகம்மாளின் அருளாசியைப் பெற்றுக் கொள்ளுமாறு பக்தர்களை அன்போடு அழைக்கின்றனர் ஆலய அறங்காவல் சபையினர்.

மேற்படி பொங்கல் பெருவிழாவன்று கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வும், சைவ நற்சிந்தனையும் இடம்பெருகின்றமையும் மதிய வேளை அன்னதானமும் வழங்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

பாலை குருந்தையும், பாங்குடன் ஆலையும்
பக்கமெல்லாம் மரச்சோலைகளும்
கூடியே வீதியை கூடாரம் போற்சுற்றி
கூட்டமாய் நிற்பதைக்காண நீவீர்
சேனையூர்ப் பதிக்கே வாருங்கள் நாக
தேவி தரிசனம் தருவாள் பாருங்கள்

என்ற பாடல் அற்புதமானது சிறப்புடையது.



# பைரஹா ஃபார்ம்ஸ் களுத்துறை, நாகொடை போதனா வைத்தியசாலைக்கு நன்கொடையளிப்பு



பைரஹா ஃபார்ம்ஸ் பிஎல்சி தனது சமூகப் பொறுப்புணர்வின் ஒரு பகுதியாக களுத்துறை, நாகொடை போதனா வைத்தியசாலைக்கு ரூ. 1.4 மில்லியன் தொகையை தாராள நன்கொடையாக வழங்கியுள்ளது. பைரஹா குழுமத்தின் ஸ்தாபகரான அமரர் நளீம் ஹாஜியாரின் சொந்த ஊர் களுத்துறை மாவட்டத்தில் உள்ள பேருவளை என்பது குறிப்பிடத்தக்கதுடன், அவரைக் கௌரவிக்கும் வகையில் இந்நன்கொடை வழங்கப்பட்டுள்ளது.

ரூ. 1,413,932 தொகை நன்கொடையானது, 5 படுக்கை வசதி கொண்ட தீவிர கவனிப்பு சிகிச்சைப் பிரிவை இவ்வைத்தியசாலையில் நிறுவி, தீவிர மருத்துவ சிகிச்சை மற்றும் கவனிப்பு தேவைப்படும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கவும், இலங்கையில் மருத்துவ சேவைகளை மேம்படுத்தவும், உதவிக் கரம் நீட்டவும் இது இடமளிக்கிறது.

நாகொடை போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு அல்லது தீவிர கவனிப்பு சிகிச்சை வசதிகள் இல்லை என்றும், களுத்துறை மாவட்டம் மற்றும் அதற்கு அப்பால் 1.4 மில்லியன் மக்கள் தொகைக்கு ஏற்ப மருத்துவமனை வளாகத்தினுள் இத்தகைய வசதிகள் இருக்க வேண்டும் என மருத்துவமனை அதிகாரிகள் நீண்டகாலமாக கருத்தில் கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்த மருத்துவமனை 1,125 படுக்கை வசதிகளைக் கொண்டுள்ளதுடன், வருடாந்தம் 108,000 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகின்றனர்.

நாகொடை போதனா வைத்தியசாலையில் இருந்து அதன் பணிப்பாளர் வைத்தியர் மதுபாஷினி, பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சிந்தா குணரத்ன, திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் வைத்தியர் கமணி மற்றும் விசேட வைத்திய ஆலோசகர் வைத்தியர் எஸ்.பி.கே வதுடுர, செவிலியர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தவர்கள் நிறுவனத்தால் நிதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, இப்புதிய பிரிவை முழுமையாக பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்தனர்.

தீவிர கவனிப்புச் சிகிச்சைப் பிரிவில் புதிய சிகிச்சை விடுதி இலக்கம் 16 இன் ஏற்பாட்டுப் பணிகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, அண்மையில் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. பணிப்பாளர் சபைத் தலைவர்/ நிறைவேற்றுப் பணிப்பாளரான யாக்கூத் நளீம் மற்றும் சக பணிப்பாளர்கள், விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் தலைமை அதிகாரி குமாரினி கந்தப்பா, ஆளணி மற்றும் நிர்வாக குழும முகாமையாளர் எஸ்.பி. குமாரதாச மற்றும் வர்த்தக நாம முகாமையாளர் ரவின் மதுசங்க ஆகியோர், வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சிந்தா குணரத்ன மற்றும் பல வைத்தியசாலை ஊழியர்கள் முன்னிலையில் இடம்பெற்ற திறப்பு விழாவில் நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினர்.

# CICRA Campus இணைய பாதுகாப்பு நிபுணர்களை உருவாக்குகின்றது

CICRA Campus சான்றளிக்கப்பட்ட இணைய பாதுகாப்பு நிபுணர்களை உருவாக்கும் நோக்கில் அமெரிக்காவின் EC Council உடன் இணைந்து புதிய கற்கைநெறியை அறிமுகப்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.

சான்றளிக்கப்பட்ட இணைய பாதுகாப்பு தொழில் தகைமை கற்கைநெறி பிரத்தியேகமாக இலங்கையில் இளங்கலை பட்டதாரிகளுக்கான கல்வித்திட்டத்தின் கீழ் CICRA Campus இல் வழங்கப்படுகிறது. இணைய அச்சுறுத்தல்களைத் திறம்பட எதிர்த்துப் போராட உதவும் இணையப் பாதுகாப்புக் கோட்பாடுகள், நடைமுறைகள் மற்றும் கருவிகள் பற்றிய விரிவான புரிதல் அறிவை மாணவர்களுக்கு வழங்குவதற்காக இந்தக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குறிப்பிட்ட கற்கைநெறி இளங்கலை பட்டப்படிப்பை மேற்கொள்பவர்கள் மற்றும் 18 மற்றும் 24 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. மேலும், Certified Network Defender, Certified Ethical Hacker, மற்றும் Computer Hacking Forensic Investigator போன்ற தொழில்முறை சான்றிதழ்களை விசேட தள்ளுபடி கட்டணங்களில் வழங்குகிறது. சான்றளிக்கப்பட்ட இணைய பாதுகாப்பு தொழில் தகைமை கற்கைநெறி மற்றும் இளங்கலை பட்டப்படிப்பானது ஏறக்குறைய ரூ. 800,000 சேமிப்பைக் கொண்டு வருவது மட்டுமல்லாமல், இளம் வயதிலேயே சான்றிதழ்களைப் பெறுவதன் மூலம் மாணவர்களின் தகைமை அந்தஸ்துக்கு மதிப்பு சேர்க்கிறது. அத்துடன், அவர்கள் தொழில் சந்தையில் வலுவான இருப்பை நிலைநிறுத்திக்கொள்ளவும் உதவுகிறது.

பிரதான இணைய பாதுகாப்பு கற்கைநெறி அலகுகளுக்கு மேலதிகமாக, இது CCNA கூறுகளையும் உள்ளடக்கியது. இது மாணவர்கள் கணினி வலையமைப்புகள் மற்றும் அவற்றின் பாதுகாப்பை நன்கு புரிந்து கொள்ள உதவும்.

இந்தக் கற்கைநெறியின் கீழ் CICRA Campus இல் இருந்து தமது தகைமைகளைப் பெறும் சான்றளிக்கப்பட்ட இணைய பாதுகாப்பு தொழில் தகைமையாளர்களை அங்கிகரிப்பதற்காக CICRA Campus ஆனது இலங்கையில் உள்ள முன்னணி வணிக நிறுவனங்களுடன் நெருக்கமாக இணைந்து பணியாற்றி வருகிறது. இந்த ஒத்துழைப்பு மாணவர்களுக்கு மதிப்புமிக்க அனுபவத்தைப் பெறவும் நிஜ உலக இணைய பாதுகாப்பு சவால்களை வெளிப்படுத்தவும் உதவும். இதன் மூலம் அவர்களின் வேலை வாய்ப்பு மற்றும் தொழில் வாய்ப்புகள் அதிகரிக்கும்.

CICRA Campus இன் குழும பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான போஷன் தயாரத்ன கூறுகையில், "அதிகரித்து வரும் இணைய அச்சுறுத்தல்கள் மற்றும் கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக, நிறுவனங்கள் டிஜிட்டல் தளங்கள் மற்றும் மொபைல் செயலிகளுக்கு மாறவேண்டிய ஒரு தேவைக்கான உந்துதலால், உலகளவில் திறமையான இணைய பாதுகாப்பு தொழில் தகைமையாளர்களுக்கு அவசரத் தேவை உள்ளது. இணைய பாதுகாப்பில் கல்வியை ஊக்குவிப்பதில் CICRA Campus உறுதிபூண்டுள்ளதுடன், இப்புதிய கற்கைநெறி அந்த அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும். இது அவர்களை தொழில் சந்தையில் அதிக வேலை வாய்ப்பை பெற்றுக்கொள்ள வழிவகுக்கும். இணைய பாதுகாப்பு தொடர்பான கல்வியை ஊக்குவிப்பதில் அது கொண்டுள்ள அர்ப்பணிப்பின் ஓர் அங்கமாக, சான்றளிக்கப்பட்ட இணைய பாதுகாப்பு தொழில் தகைமை கற்கைநெறியை முன்னெடுக்க விரும்புகின்ற தகுந்த இளங்கலை மாணவர்களுக்கு 10 புலமைப்பரிசில்களை CICRA Campus வழங்குகின்றது. இந்தப் புலமைப்பரிசில்கள் கற்கைநெறியின் முழு செலவையும் உள்ளடக்கும் என்பதுடன், கல்வித் தகுதி மற்றும் நிதித் தேவையின் அடிப்படையில் வழங்கப்படும்" என்று குறிப்பிட்டார்.

CICRA Campus ஆல் ஆரம்பிக்கப்படுகின்ற சான்றளிக்கப்பட்ட இணைய பாதுகாப்பு தொழில் தகைமை கற்கைநெறியானது இலங்கையில் உலகத்தரம் வாய்ந்த இணைய பாதுகாப்பு கல்வியை வழங்குவதில் ஒரு குறிப்பிடத்தக்க முக்கிய படியாகும். இந்தக் கற்கைநெறியானது மாணவர்களுக்கு இணைய அச்சுறுத்தல்களை எதிர்த்துப் போராடுவதற்குத் தேவையான திறன்களையும் அறிவையும் வளர்த்துக் கொள்ள உதவுவது மட்டுமல்லாமல், உலகளவில் அங்கிகரிக்கப்பட்ட மதிப்புமிக்க சான்றளிப்பு அங்கிகாரங்களையும் அவர்களுக்கு வழங்கும்.

திருப்பதி

# விபத்துகளை தடுக்க நூதன முயற்சி




திருப்பதி மலை பாதையில் நடைபெறும் விபத்துகளை தடுக்க, திருமலை பொலிஸார் நூதன முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

கடந்த சில நாள்களாக திருப்பதி மலை பாதையில் தொடர்ந்து விபத்துகள் ஏற்பட்டு வருகின்றன. இதனால் திருமலைக்கு வரும் பக்தர்கள் பலர் காயமடைந்து ஊர் திரும்ப வேண்டிய நிலை ஏற்படுகிறது.

எனவே மலை பாதையில் ஏற்படும் விபத்துகளை தடுக்க தேவஸ்தான நிர்வாகத்துடன் இணைந்து வாகன ஓட்டிகளின் முகங்களில் தண்ணீர் தெளித்து மலைப்பாதையில் அனுப்பி வைக்கின்றனர்.

இதற்காக திருப்பதி மலையில் உள்ள ஜி என் சி டோல்கேட்டில் வாகன ஓட்டிகளின் முகத்தில் தண்ணீர் தெளிக்க தேவையான ஸ்பிரேயுடன் காத்திருக்கும் பொலிஸார், வாகனங்களை நிறுத்தி திருப்பதி மலையில் இருந்து திருப்பதிக்கு செல்லும் வாகனங்களின் ஓட்டுநர்களுக்கு முகத்தில் தண்ணீரை பீய்ச்சி அடித்து புத்துணர்வு பெற செய்து வழிய அனுப்பி வைக்கின்றனர்.

# கற்பனையில் கூட நினைத்ததில்லை – ராகுல்காந்தி



எம்.பி. பதவியிலிருந்து தாம் தகுதி நீக்கம் செய்யப்படுவோம் என்று கற்பனையில் கூட நினைத்ததில்லை என காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரான ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

அண்மையில் கலிபோர்னியாவில் ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தில் உரையாற்றிய ராகுல் காந்தி, அவதூறு வழக்கில் இந்தியாவிலேயே அதிகபட்ச தண்டனை பெற்ற முதல் நபரும், கிரிமினல் தண்டனை பெற்றதும் தான்தான் என்று கூறியுள்ளார்.

அத்துடன் எம்.பி பதவியிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவோம் என கற்பனையில் கூட நினைத்ததில்லை. என்றாலும், அது தனக்கு மிகப்பெரிய வாய்ப்பை அளித்துள்ளதாக குறிப்பிட்டுள்ள ராகுல் காந்தி, அரசியலில் செயற்படும் விதம் இதுதான் என்றும் கூறியுள்ளார்.



# முன்கூட்டியே பாடசாலைகளைத் திறக்கக் கூடாது

“முன்கூட்டியே பாடசாலைகளைத் திறக்கக் கூடாது, மீறினால் நடவடிக்கை எடுக்கப்படும் என பாடசாலைக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் ”கோடை வெயில் அதிகமாக இருப்பதையொட்டி பாடசாலைகளைத் திறக்கும் திகதியை வரும் 7ஆம் திகதிக்கு தள்ளி வைத்திருக்கிறோம்.

முன்கூட்டியே பாடசாலைகளைத் திறக்கக் கூடாது. அதை மீறி தனியார் பாடசாலைகளைத் திறந்திருந்தால் அந்தப் பாடசாலைகளின் மீது அதிகாரிகள் விசாரணை நடத்தி நடவடிக்கை மேற்கொள்வார்கள். சி.பி. எஸ்.இ. பள்ளிக் கூடங்கள் அதுவும் 10-ம் வகுப்புக்கு மேல் திறந்திருக்கலாம்.

தனியார் மெட்ரிகுலேஷன் பள்ளிக் கூடங்கள் திறந்திருந்தால் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இது சம்பந்தமாக அதிகாரிகளுக்கு தேவையான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கனடா

# கனடாவால் அமெரிக்காவில் புகை மண்டலம்



கனடாவில் பரவிய காட்டுத் தீயால், அண்டை நாடான அமெரிக்காவின் மாசசூசெட்ஸ் நகரத்தில் புகை மண்டலம் சூழ்ந்தது.

கடந்த சில வாரங்களாக கனடாவில் காட்டுத் தீ கட்டுக்கடங்காமல் பரவி வருகின்றது. காட்டுத் தீயால் நோவா ஸ்கோடியா மாகாணத்தில் சுமார் 18,000 பேர் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

தீயணைப்பு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில், காட்டுத் தீயால் எழுந்த புகை, கனடா எல்லையை ஒட்டியுள்ள அமெரிக்காவின் *Stoughton* பகுதியை சூழ்ந்துள்ளது.

# சடலத்துடன் 6 ஆண்டுகள் வாழ்ந்த நபர் கைது



இறந்த தாயின் சடலத்துடன் 60 வயது முதியவர் ஒருவர் ஆறு ஆண்டுகளாக வசித்துவந்த சம்பவம் இத்தாலியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வனெட்டோ பகுதியைச் சேர்ந்த ஹெல்கா மரியா ஹெகன்பார்த் என்ற முதாட்டி ஆறு ஆண்டுகளுக்கு முன்பு தனது 86 வயதில் மரணமடைந்துள்ளார்.


இந்நிலையில் ஹெல்காவுக்கு மாதந்தோறும் கிடைத்து வந்த பென்ஷன் பணத்தை இழந்து விடக் கூடாது என்று எண்ணி, திட்டம் போட்ட மகன் அவரது உடலை வீட்டிலேயே மறைத்துவைத்துள்ளார்.

இவ்வாறு 6 ஆண்டுகள் ஆன நிலையில், சந்தேகத்தில் ஹெல்காவின் குடியிருப்பிற்குள் அதிரடியாக நுழைந்த அதிகாரிகள் சோதனை நடத்திய போது தான் உண்மை அம்பலமாகியுள்ளது.

இச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்கா

# அதீத வெப்பத்தால் உயிரிழந்த குழந்தை



தேவாலய ஆராதனையில் பங்கேற்கச் சென்ற தம்பதி, தங்களது 11 மாதக் குழந்தையை காருக்குள் தனியாக விட்டுச் சென்றதால், அதீத வெப்பம் தாங்காமல் உயிரிழந்த சம்பவம், அமெரிக்காவில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில், புளோரிடா மாகாணத்தில், போதையில் இருந்த தம்பதியால் காரில் தனியாக விட்டுச் செல்லப்பட்ட 2 வயது குழந்தை வெப்பம் தாங்காமல் உயிரிழந்தது.

இந்நிலையில், மவுண்ட் ஒப் ஒலிவ்ஸ் எவாஞ்சலிகல் பாப்டிஸ்ட் தேவாலயத்திற்கு வெளியே நிறுத்தப்பட்டிருந்த காரில் மயக்கமுற்ற நிலையில் இருந்த குழந்தையை மீட்ட பொலிஸார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

*‘hot car deaths’* என்று குறிப்பிடப்பட்டும் இதுபோன்ற சம்பவங்களால் அமெரிக்காவில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 38 குழந்தைகள் பலியாவதாகக் கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## டயலொக் திறந்த கோல்ப் சம்பியன்ஷிப்

# இரண்டாம் நாளில் டிவேடி முன்னிலை

டயலொக் திறந்த கோல்ப் சம்பியன்ஷிப்பானது றோயல் கொழும்பு கோல்ப் கழகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்த நிலையில் நேற்று முன்தின இரண்டாம் நாள் முடிவில் இந்தியாவின் டிவேடி சமரத் முன்னிலையிலுள்ளார்.

டிவேடி 133 புள்ளிகளுடன் முதலிடத்திலுள்ள நிலையில், இன்னுமொரு இந்தியரான சோஹன் ஓம்பிரகாஷ் 134 புள்ளிகளுடன் இரண்டாமிடத்திலும், பங்களாதேஷின் ஹொஸைன் ஜமால் 135 புள்ளிகளுடன் மூன்றாமிடத்திலும் காணப்படுகின்றனர்.

## இலங்கை எதிர் ஆப்கானிஸ்தான்:

# ஓ.நா.ச.போ தொடர் இன்று ஆரம்பிக்கின்றது



இலங்கை, ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரானது ஹம்பாந்தோட்டையில் இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகள் இம்மாதம் நடைபெறவுள்ள நிலையில் அதற்கான தயார்படுத்தலாக இத்தொடர் இலங்கைக்கு காணப்படுவதுடன், ஆப்கானிஸ்தானுக்கு உலகக் கிண்ணத்துக்கான தயார்படுத்தலின் ஆரம்பமாக காணப்படுகின்றது.

இலங்கைக் குழாமில் மதீஷ பத்திரண இடம்பெற்றுள்ள நிலையில் அவரை எவ்வாறு தசுன் ஷானக கையாளப் போகின்றார் என்ற கேள்விக்குறி காணப்படுகின்றது. ஏனெனில், ஐ.பி.எல்லில் மாற்று வீரராகவே பத்திரண களமிறங்கியதுடன், இனிங்ஸின் இறுதிப் பகுதியிலேயே பந்துவீசியிருந்தார். எனவே எவ்வாறு அவர் புதிய பந்தைக் கையாள்வார், 50 ஓவர்கள் முழுவதிலும் களத்திலிருப்பார் என்ற கேள்விக்குறிகள் காணப்படுகின்றன.

மறுப்பக்கமாக கீழ் முதுகு உபாதை காரணமான தொடரின் முதலிரண்டு போட்டிகளிலும் ரஷீட் கான் விளையாட மாட்டார் என்பதோடு, வனிடு ஹஸரங்கவும் கால் உபாதையிலிருந்து குணமடைந்து வருவதன் காரணமாக இப்போட்டியில் விளையாடுவது சந்தேகமாகவே காணப்படுகின்றது.

இறுதியாக கடந்தாண்டு நொவெம்பரிலேயே ஒருநாள் சர்வதேசப் போட்டியில் ஆப்கானிஸ்தான் விளையாடிய நிலையில் துடுப்பாட்டவீரர்கள் சிறந்த போர்மில் உள்ளூர் முதற்தரப் போட்டிகளில் காணப்பட்டமை அவ்வணிக்கு உற்சாகத்தை வழங்கும்.

திமுத் கருணாரத்னவின் மீள்வருகையானது நிலைத்து நின்று இனிங்ஸை நகர்த்துவதற்காக இருக்கின்ற நிலையில், ஓட்ட விகிதத்தையும் இலங்கை அதிகரிக்க வேண்டியுள்ளது.



# மன்செஸ்டர் சிற்றி செல்லும் கொவாசிச்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான செல்சியின் மத்தியகளவீரரான மட்டியோ கொவாசிச்சைக் கைச்சாத்திடும் பேச்சுக்களில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி உள்ளதாகக் கூறப்படுகிறது.

செல்சியுடன் இன்னும் ஓராண்டு ஒப்பந்தத்தையே 29 வயதான கொவாசிச் கொண்டிருக்கின்ற நிலையில், அவரது ஒப்பந்தத்தை நீடிப்பதற்கான கலந்துரையாடல்கள் இடம்பெறவில்லைப் எனத் தெரிகிறது.

## கோட்டமட்ட விளையாட்டுப் போட்டியில்

# ஓட்டமாவடி தேசிய பாடசாலை முதலிடம்

எச்.எம்.எம்.பர்ஸான்

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டியில் ஓட்டமாவடி தேசிய பாடசாலை முதலிடம் பெற்றது.

ஓட்டமாவடி அமீர் அலி மைதானத்தில் இறுதி நாள் நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்ற நிலையில் ஓட்டமாவடி தேசிய பாடசாலை 151 புள்ளிகளைப் பெற்று முதலிடம் பெற்றுக் கொண்டதுடன், ரிதிதென்னை இக்ராஹ் வித்தியாலயம் 147 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், ஓட்டமாவடி பாத்திமா பாலிகா மற்றும் மீராவோடை அல் ஹிதாயா வித்தியாலயம் ஆகியன 103 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

# யூரோப்பா லீக்: சம்பியனான செவிய்யா




ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் யூரோப்பா லீக் தொடரில் ஸ்பானிய லா லிகா கழகமான செவிய்யா சம்பியனானது.

ஹங்கேரியில் நேற்று அதிகாலை நடைபெற்ற இத்தாலிய சீரி ஏ கழகமான றோமாவுடனான இறுதிப் போட்டியில் பெனால்டியில் 4-1 என்ற கோல் கணக்கில் வென்றே செவிய்யா சம்பியனாகி சம்பியன்ஸ் லீக்குக்கு தகுதி பெற்றிருந்தது.

போட்டியின் வழமையான நேர, மேலதிக நேர முடிவில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றிருந்தன. றோமா சார்பாகப் பெறப்பட்ட கோலை போலோ டிபாலா பெற்றிருந்ததோடு, செவிய்யா சார்பாகப் பெறப்பட்ட கோலானது ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 02 ஜூன் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.